UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

**Published on 14, Oct-Dec 2025** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# குறுந்தொகையில் அறிவியல் உண்மைகள்

**மா. சீத்தாராமன்**
உதவிப் பேராசிரியர், ஆய்வாளர்
ஹாஜி கருத்தராவுத்தர் ஹௌதியா கல்லூரி
உத்தமபாளையம், தேனி மாவட்டம்.
**ச. சுஜாதா**
தமிழ்த் துறைத்தலைவர் - உதவிப் பேராசிரியர், நெறியாளர்
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் அறிவியல் சார்ந்த பதிவுகள் நிறைந்துள்ளன. அவற்றைப்பலரும் அறிவியல் கண்ணோடு பார்ப்பதில்லை. இலக்கியப் பார்வையோடு நின்று விடுகின்றனர். இலக்கியங்கள் எடுத்துரைக்கும் உள்ள அறிவியல் கருத்துக்கள் தான் விஞ்ஞானிகள் ஆய்வுக்கும் உறுதுணையாகின்றன. இன்றைய மக்கள் தம் வாழ்வில் மேம்படவும்› வளம்பெறவும் வசதிகள் எய்தவும் உதவக்கூடியது அறிவியலாகும்.

இயற்பியல்› வேதியியல்› புவியியல்› வானியல்› பயரியல்› மண்ணியில்› உயிரியல் முதலான பல துறைகளை உள்ளடக்கியதுதான் அறிவியல் வளரவும்› மலர்ந்த உலகின் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழர்களின் தொன்மை வாய்ந்த வானியல் அறிவு பற்றிய செய்திகள் சங்க இலக்கியமான குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. குறுமையான அடிகளைக் கொண்டு 400 புலப்பாடல்கள் 203 புலவர்களுடன் பாரதம் பாடிய பெருந்தேவனார் உட்பட கடவுள் வாழ்த்தாக முருகனை பாட்டுடைத் தலைவனாக தொடங்குவது தமிழர் மரபின் சிறப்பாகும்.

**தொல்காப்பியம்**

இடைச் சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பியம் என்ற தமிழின் முதல் இலக்கண நூலைத் தொல்காப்பியர் கொடுத்துள்ளார். தொல்காப்பியர் உலகிலுள்ள உயிர்களின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்து› உயிர்களின் பாகுபாட்டை ஓரறிவிலிருந்து ஆறறிவு வரை வகைப்படுத்தி சிறந்த விஞ்ஞானியை மிஞ்சும் முறையில் நிரல்படுத்தி மரபியலில் கூறியுள்ளார். மரபியல் என்பது வழிவழியாக வரும் முறைமை, பழக்க வழக்கங்கள் பற்றிக் கூறுவதாகும். உலகிலுள்ள எல்லா உயிரினங்களையும் ஆறு வகைகளில் அடக்கிய சீர்பெருமைக்குரியது.

ஒன்றறீ வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவெ அததொனடு நாவே
மூன்றறீவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்களை
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மன்னே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினேரே” (அகப்பொருள் : 571) ஒன்று முதல் ஆறறீவு பயிர்கள் வரையான உயிரினங்களையும் பின்வருமாறு

| அறிவு நிலை | அறியும் ஆற்றல் | உதாரணம் |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் | புல்மரம் |
| ஈரறிவு | உற்றறிதல், அணிவகுத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல், அணிவகுத்தல், நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல், அவைத்தல், நுகர்தல், காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல், சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் | மனிதன் |

தொல்காப்பியக் கருத்தினையொட்டி› இந்தியத் தாவரவியல் விஞ்ஞானி மேதை ஜே.சி.போஸ் 1858 இல் அவர்கள் தாவரங்கள் வளர்ச்சி› உயிர் உணர்ச்சி. அறிவு என்பன உள்ளனவென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

“ஐம்பெரும் பூதங்களான நிலமும்› நெருப்பும்› நீரும்› காற்றும்› விண்ணும் கலந்தொரு மயக்கமான நிலையில் இந்த உலகம் உண்டாயிற்று. இவைகள் யாவும் ஓர் எல்லைக்குள் அமைந்து இயங்கிக் கொண்டிருந்த நிலையில் உயிர்கள் தோன்றின’ என்ற உண்மையைத் தொல்காப்பியர்

**“நிலம் தீ நீர்வளி விசும் போடு ஐந்தும்**
**கலந்து மயக்கம் உலகம் ஆதலின்**
**இருதிணை மையம்பால் இயல்நெறி வழாமை**
**திரிவில் சொல்லாகு தழாஅல் வேண்டும்.** (தொல்பொருள் மரபியல் - 635) என்ற சூத்திரம் அமைத்துச் சென்றார். உலகு› நீர்› நிலம்› தீ› காற்று› ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்கலந்த மயக்கமாதலான் மேற்கூறப்பட்ட பொருள்களைத்தினனயும் பாலும் வழுவதில்லாமல் திரிவுபடாத சொல்லோடே தழுவுதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

**அறிவியல் பார்வையில் காதல்**

பன்முகத்தன்மையுடன் உலகமெல்லாம் பறந்து விரிந்து நிலத்தில் நிற்கின்ற காதலினை ஒரு புள்ளியில் சுருக்கி அளவிட முடியாது. அத்தகைய விளக்கங்களுக்கெல்லாம் அறிவியல் முறையில் அமையாத வெற்றுக் கற்பனைக் கதைகள் புனைவுகளேயாகும். காதலினைப் புரிந்து கொண்டு விளக்க வேண்டுமென்றால் மூளையின் இயக்கவியலையும் சமூகக் கட்டமைப்பினையும் புரிந்து கொள்வது அவசியமாகிறது.

மூளையில் ஏற்படுகின்ற வேதியியல் மாற்றமே காதலாகிறது. வேதியியல் மாற்றங்களைக் கொண்டு காதலை மூன்று நிலைகளாகப் பகுத்துணர முடியும். அட்டவணை 1ல் காதலின் மூன்று நிலைகளும்› அந்நிலைகளுக்கான ஹார்மோன்களும் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

| வ.எண் | காதலின் நிலைகள் | ஹார்மோன்கள் |
|---|---|---|
| 1. | காமம் (Lust) | டெஸ்ய் டோஸ்டிரோன், (Testosterone)<br>ஈஸ்ட்ரோஜன் (Estrogens) |
| 2. | ஈர்ப்பு (Attraction) | டோப்பமைன் (Dopamine)<br>நேரோபினிஃப்ரைன் (Nerepinephrine)<br>செரோடோனின் (Serotonin) |
| 3. | பிணைப்பு (Attachment) | ஆக்ஸிடோஸின் (Oxytogin)<br>வாஸப்ராஸின் (Vasopressin) |

காதலென்பது சாதி› மத› இன› வர்க்க பேதங்கள் பார்த்து செயற்கையாக ஏற்படும் நிகழ்வல்ல. மனிதத் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ள மூளையில் தூண்டப் படுகின்ற இயற்கை நிகழ்வேயாகும் காதல் ஆகும்.

**காதல்**

காதல் என்பதற்கு அன்பு› வேட்கை என்ற பொருள்களைத் தமிழ்ப்பேரகராதி தருகின்றது. எல்லா உயிர்களிடத்தும் கொள்ளும் அன்புணர்வைக் காதல் எனக் கொண்டாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் அன்புணர்வே காதல் என்ற பெயரால் சுட்டப்படுகின்றது. மேலும்; காதல் இயற்கையில் தோன்றும் உணர்வு அது தலைவனிடம் தலைவியைக் கண்டபொழுது வெளிப்படுகிறது

தலைவன்› தலைவியின் மீது வைத்திருக்கும் அன்பை உயிரினும் சிறந்ததென்றும் கிடைத்தற்கரிய தலைவியின் அன்பு கடல் சூழ்ந்த உலகத்தைப் பெற்று வாழ்வதை விடப் பெரியது என்றும் உணர்கிறான் தலைவன். இதனை›

**கடல்சூழ் மண்டிலம் பெறினும்**
**விடல்சூ ழலனான் நின்னுடை நட்பே**
(குறுந்: 300)

என்று தலைவியின் மீதுள்ள காதலைப் புலப் படுத்துகிறான்.

தலைவனிடம் எப்பொழுதும் அன்புதான் தோன்றி நிற்க வேண்டும். அவ்வாறில்லாமல் காலை› பகல்› மாலை› யாமம் விடியல் என்ற சிறுபொழுதுகளிடையே காமம் தோன்று மாயின் அத்தகைய தலைவனின் காதல் பொய்யானது. அதனால்› தலைவியைக் காமத்தின்வழி அல்லாமல் காதலின் அடிப்படையில் விரும்பும் தலைவன் பிரிவு என்று வரும்போது உயிரோடு வாழ்வதைப் பழியென்று நினைக்கிறான். இதனை

**காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்**
**பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்**
**மாவென மடலொடு மருகிற் றோன்றித்**
**தெற்றெனத் தூற்றலும் பழியே**
**வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே**
(குறுந்: 32)

என்று உண்மையான காதலின்வழி தலைவி யைப் பெற நினைத்துக் காதலென்பதை உயிரிலும் மேலானதாகக் கருதுகிறான். மேலும் அறிவுடையவர்கள் செல்வம் தீர்ந்து வறுமைநிலையில் வருத்தத்தைப் போக்க உறவினரிடத்தில் போய்க் குறையை வாய்விட்டுச் சொல்ல நினைத்துப் பின்பு வறுமையைச் சொல்லாமல் இருப்பதைப் போல் தலைவனும்› தலைவியிடம் விருப்பத் தைச் சொல்லாமல் செல்கிறான்.

**தலைவன் உள்ளம்**


உள்ளப்புணர்ச்சியை விரும்பிநிற்கும் தலைவன் தலைவியின் தன்மைகளைப் பாராட்டுகிறான். தலைவியின் இளமையையும் அழகையும் கண்டு வியக்கிறான். இதனால் தலைவனின் உள்ளத்தில் தலைவியின் அழகும்› அமைதியும் நுண்ணிய வேறு பாட்டை ஏற்படுத்தியது. இயற்கைப்புணர்வின் பொழுது தலைவியின் கூந்தலாகிய தலையணையில் இன்பமடைந்து நின்றவனாக அக்கூந்தலின் இயல்பினை நினைத்து இக்கூந்தலினால் பெற்ற இன்பத்தைத் தொடர்ந்து பெற இயலவில்லையே என்று நெஞ்சிற்குக் கூறுகிறான்.

**யானயந் துறைவோள் தேம்பாய் கூந்தல்**
**வளங்கெழு சோழ ருறந்தைப் பெறுந்துறை**
**நுன்மண லறல்வார்ந் தன்ன**
**நன்னெறி யவ்வே நறந்தண் ணியவே**
(குறுந்: 116)

இப்பாடலில் அறல்–கருமணல் என்பது இரும்பு ஆக்ஸைடு, டைட்டானியம் டை ஆக்ஸைடு மற்றும் தாதுக்கள் கலந்து கடல்வாழ் உயிரினங்கள் உறைவிடமாக உள்ளன என்ற கருத்துக்கள் புலப்படுகின் றன. அறிவியில் சார்ந்த இலக்கியங்களில் தலைவனால் காதலிக்கப்பட்ட தலைவியின் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தல் சோழ மன்னனின் உறையூரை ஒட்டிச்செல்லும் காவிரி மணலாகிய கருமணல் நீண்டு சரஞ்சரமாகப் படிந்திருப்பது போல மணம், குளிர்ச்சி உள்ளதாக அமைந்திருக்கிறது. என்று தலைவியின் நீண்ட கூந்தலை தன்மனதில் நினைத்து நலம் பாராட்டுகிறான் தலைவன்.

செல்வம் மிகவும் இன்பந்தரக் கூடியது. ஆனால் கிடைத்தற்கு அரிது அதைப்போலவே தலைவியும் பெறுவதற்கு மிகவும் அரிய

வளாக இருக்கிறாள். ஒருவனின் வாழ்க்கைக்குச் செல்வம் மிகவும் இன்றியமையாதது. அதை எவ்வழியிலும் பெற்று வாழ்க்கையை இன்பமாக்க வேண்டும் என்ற எண்ணம். எல்லா மானிடற்கும் பொதுவானது. தலைவியும் தலைவனின் வாழ்க்கைக்குச் செல்வத்தை விட மிகவும் தேவையானவளாகக் கருதப் படுகிறாள். தலைவி மீது தலைவன் கொண்ட காதல் மிகுதியால் தலைவன் தன் நினைவி ழப்பதை மறதி என்பர். தன்னை மறந்த நிலையை உளவியல் ஆண்டிரோகிரேடு என்று உணர்த்துக்கிறது.




**இல்லோ லின்பங் காமுற் றாஅங்**
**கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி**
**நல்ல ளாகுத லறிந்தாங்**
**கரிய ளாகுத லறிய தோயே** (குறுந்: 120)

என்கிறது. மேலும் தலைவியை முதன்முதலாகப் பார்த்த அந்த நாள் தொடங்கி இன்றுவரை அவளைவிட்டுப் பிரிவு என்பதை அவன் மனதாலும் நினைக்கவில்லை. தலைவியை ஒருமுறை கூடுதல் இந்தப் பிறவிக்குரிய முழுப்பயனாக அமையும் என்கிறான். தலைவன் மேலும் அவளைக் கூடிய பிறகு அதன்காரணமாக உயிரை இழக்க நேரிட்டாலும் அதைப்பற்றித்தான் கவலையுறவில்லை என்கிறான். தலைவன் தலைவியைக் காணாது இறந்துவிடுதல் நன்று என்கிறான். தலைவியை மறந்து தன்னால் வாழ முடியாத நிலையைத் தன் நெஞ்சிற்கு உணர்த்துகிறான் தலைவன்.

**தலைவியின் உள்ளம்**

**உடம்பொடு உயிரிடை எண்ணமற்றன்ன**
**முடந்தையொடு எம்மிடை நட்பு** குறள்-1122

உடலுக்கும், உயிருக்கும் என்ன தொடர்பு உண்டோ, அத்தொடர்பே தலைவிக்கும், தலைவனுக்கும் ஆன நட்பு என அன்பை வள்ளுவர் வழியில் நின்று விளக்குகிறார்.
தலைவி தலைவனிடத்துக் கொண்ட காதல் தாயன்பை ஒத்தது. தலைவி தலைவனைப் பிரிந்துதான் ஒருத்தியாதலையும் தன்னைப்பிரிந்து அவன் ஒருவனாதலையும் விரும்பாமல் தலைவன்பால் கொண்ட அன்பை மிக்க நயத்தோடு புலப்படுத்துகிறாள். தலைவி தன் காதலை மறைக்கும் முறை தனிச்சிறப்பு பெற்றது. இல்லறத்தை இனிமையாக நடத்திச் செல்கின்ற தலைவி பலவித வேலைகளுக்கிடையே தலைவன்பால் கொண்ட அன்பு மாறாதவளாக இருக்கிறாள். அன்பு என்ற சொல்லின் உள்ளீடாக விளங்கும் காதல் தலைவிக்குப் பிறப்பும் இறப்பும் எப்படி வாழ்வில் ஒருமுறையோ அதுபோல் ஒருதலைவன்பால் காதல் கொண்டு அவனை மணப்பதையே பெரும்பேறாகக் கருதுகிறாள். தலைவனைப் பிரிந்திருக்க இயலாத தலைவி பிரிவென்று வரும்பொழுது உயிரிழத்தலைச் துச்சமென நினைக்கிறாள். இதனை உடலுக்கும், உயிருக்கும் என்ன தொடர்பு உண்டோ, அத்தொடர்பே தலைவிக்கும், எனக்கும் ஆன நட்பு என அன்பை வள்ளுவர் வழியில் நின்று விளக்குகிறார்

**விரிநீர்ச் சேர்ப்ப னீப்பி னொருளும்**
**இன்னுயி கல்லாது பிறிதென்**
**றெவனோ தோழி நாமிழுட் பதுவே** (நற் 334)

என்று தலைவி தன் காதலின் தன்மையைப் புலப்படுத்துகிறாள். மேலும் தலைவி யாம்

எம்முடைய காதலரைக் காணோமாயின் கரையிலுள்ள கற்களோடு உராய்ந்து செல்லும் நுரையைப்போல மெல்ல உயிர் தேய்ந்து இல்லையாவோம் என்கிறாள். தலைவி தலைவன் மீது கொண்ட காதல் அளவிடற்கரியது என்று காதலின் வலியைப் புலப்படுத்துகிறாள் இதனை›

**பெருங்கடற் கரையது சிறுவென் காக்கை**
**நீத்து ரிருங்கழி பிரைதேர்த் துண்டு**
**பூக்கமழ் பொதும்பிற் சேக்குக் துறைவனொ**
**டியாத்தேம் யாத்தன்று நட்பே**
**அவிழ்தற் கரித்து முடிந்தமைந் தன்னே**
(குறுந் : 313)

என்கிற பாடல் உணர்த்துகிறது.

**பரத்தை**

புலவர்கள் கற்பின் பெருமையை விண்ணுக்கு உயர்த்திப் பாடிய போதும் நடைமுறை வாழ்க்கையில் பரத்தமை என்ற அவலம் நிறைந்து இருப்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தலைவியின் குடும்பவாழ்விற்கு இடையூறாக வரும் பரத்தை அவளின் சினத்திற்கு ஆளாவதும் இயற்கை. 'விருப்பு வெறுப்பின்றிக் கண்டவாறு பணத்திற்காகவோ பொருளுக்காகவோ உடலுறவு கொள்கின்ற செயல் பரத்தமை எனப்படுமென" வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் தருகிறது. மேலும் பரத்தை என்பதற்கு 'ஒருவனுக்கு முறையான மனைவியாக வாழாமல் ஒழுகுபவள்› பொது மகள்› விபச்சாரி› விலைமகள்› ஒழுக்கக் கேடு› அயன்மை பிறன்மனைச்சேரல்' என்று அகராதியும்› 'பரத்தை› கணிகை› சூளை› பொதுப்பெண் எனச்சேந்தன் திவாகர நிகண்டும் 'விலைமகள்› சூளை› வேசி› பரத்தை› கணிகை"என்று பிங்கல நிகண்டும் பொருள் தருகின்றன. மேலும் பரத்தையர் பெறும் இடத்தை


**பாணன்› கூத்தன் விறலி பரத்தை**
**யானைஞ் சான்ற அறிவர் கண்டோர்**
(தொல்-பொருள் 491:1-2)

என்று பரத்தையர் சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தைத் தெளிவாகச் சுட்டுகிறது. தொல் காப்பியம் மேலும் பரத்தை ஒழுக்கத்தை எப்போது மேற்கொள்ளலாம். மனைவியை எப்போது பிரியக் கூடாது என்பதற்கான காலத்தையும்,

**பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்தகன் றுரையார் என்மனார் புலவர்**
**பரத்தையிற் பிரிந்த காலை யான**
(தொல்: 187)

**தீண்டா நாள் முந்நாளும் நோக்கார்**
**நீராடியபின்**
**ஈராறு நாளும் இகவற்க என்பவே**
**பேரறிவாளர் துணிவு!** (ஆசாரக்கோவை)

**பூத்த காலைப்புனையிழை மனைவியை**
**நீராடிய பின் ஈராறு நாளும்**
**கருவயிற் றுறாங்கால மாதலிற்**
**பிரியா பெறா அன்** (அகத்–11)




என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டபோது அது முதல் பன்னிரண்டு நாட்கள் மகப்பேறு கருதி அவளோடு உடனுறைதல் நலம் என்று கூறுகிறதேயொழிய பரத்தமை ஒழுக்கத்தைக் கடிந்து தொல்காப்பியம் கூறவில்லை. எந்தக் காலத்தில் சேர்ந்திருக்க வேண்டும் அதன் பிறகு அவளைப் பிரிவது எந்தக்காலம் என்பதைத்தான் தொல்காப்பியம் சுட்டுகிறது. அகஇலக்கியத்தில் பல ஆண்டு களின் காமப்பசி தீர்க்கும் பெண்களைப் பரத்தை என அழைத்தனர் அவர்களை

**இற்பரத்தை**
**காதற் பரத்தை**
**காமக்கிழத்தி**
**சேரிப்பரத்தை**

என நான்கு வகையாகப் பிரித்தனர். மேலும் பரத்தையர் பற்றி இளம்பூரணர் கற்பியல் உரையில் 'பரத்தையவராவர் யாதெனின் அவர் ஆடலும் பாடலும் வல்லவராக அழகும் இனிமையும் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார் என்று குறிப்பிடுகிறார். மேலும் இற்பரத்தையாக விளங்குபவர் தலைவன் ஒருவனுக்கே அன்பு பூண்டு ஒழுகுபவளாகவும்› சேரிப்பரத்தையர் பலரிடம் அன்பு கொள்பவளாகவும் விளங்கு கின்றனர். இதனையே நம்பியகப்பொருள்

**யாரையும் நயவா இயல்பிற் சிறந்த**
**சேரிப் பரத்தையர் மகளிராகிக்**
**காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்**
(அகப்பொருள் விளக்கம் நூ: 114)

என்று காட்டுகிறது. இற்பரத்தையரைத்

தலைவன் வரைந்து கொள்ளுதற்குரிய இடம் இருக்கிறது என்கிறது அகப்பொருள்

**அவளும் வரைந்த குரியோர் உளரோ**
(அகப்பொருள்: 115)

என்கிறது. மேலும் பரத்தையரில் காதற் பரத்தையர் சமுதயாத்தில் உயர்ந்த மதிப் போடு இருந்திருக்கிறார் என்றும் சேரிப் பரத்தையர் அவ்வளவு மதிப்பிற்குரியராகக் கருதப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கருதினர். இத்தகைய பரத்தையர் சங்ககால த்தில் மிகுந்தமைக்கான காரணத்தை ஔவை துரைசாமிப்பிள்ளை 'அந்நாளைய அரசிற் சூழ்நிலை அடிக்கடி நிகழும் போர்› சமுதாய அமைப்பு ஆகியவற்றால் ஆடவர் தொகையி னும் மகளிர் தொகை குன்றியமையின் மிகை மகளிர் என்று உளராயினர்” என்று கூறுகிறார். மேலும் 'பரத்தையர் எதனை முக்கியமாகக் கொண்டனர் என்பதை டாக்டர் உ.வே.சா. “இப்பரத்தையர் பிரிவு உலகிய லையே கருதி அமைந்தது தான் என்று ஒருவகைத் தெளிவை உண்டாக்குகிறார்.” சங்க இலக்கியப் பாடல்களில் மருதத் திணையில் தான் அதிகமாகப் பரத்தமை ஒழுக்கம் பேசப்படுகிறது. இப்பரத்தையர்கள் 'வீதிவழியாகத் திரியும் கீழ்மக்கள் அல்லர். பரத்தைக் குலத்தவளேனும் இல்லறத்தின் பகை இல்லாமல் சிலப்பதிகாரத்தின் மாதவி போன்று ஆடலும் பாடலும் சான்றவள் கலை பயின்றவள் பெரும்பாலான குடும்பப் பண்பு உடையவள். வள்ளுவர் கூறும் பொருட் பெண்டு அல்லள்' எனச் சிறப்பிக்கிறார். வ.சுப. மாணிக்கம்.

## நிறைவுரை

சங்க இலக்கியங்களில் அறிவியல் சார்ந்த பதிவுகள் நிறைந்துள்ளன. அவற்றைப் பலரும் அறிவியில் கண்ணோடு பார்ப்பதில்லை. இலக்கியப் பார்வையோடு நின்று விடுகின்ற னர். இலக்கியங்களில் உள்ள அறிவியல் தான் விஞ்ஞானிகள் ஆய்வுக்கும் உறுதுணை யாகின்றன. இயற்பியல், வேதியியல், புவியி யல், வானியல், மண்ணியல், உயிரியல் முதலான பல்துறைகளை உள்ளடக்கியது தான் அறிவியலாகும். இடைச்சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பியம் என்ற தமிழின் முதல் இலக்கண நூலைத் தொல்காப்பியர் கொடுத்துள்ளார். தொல்காப்பியர் உலகில் உள்ள உயிர்களின் பாகுபாட்டை வளர்த்தெ டுத்து இதன் அடிப்படையில் ஐம்பெரும் பூதங்களான நிலமும், நீரும், காற்றும் வின்னும் கலந்தொரு மயக்கமான நிலை யில் இந்த உலகம் உண்டாயிற்று.

அறிவியல் வளர்ச்சி மனித இயலாக மாறும் போது மூளையில் ஏற்படுகின்ற வேதியியல் மாற்றம் காதலாகிறது. வேதியியல் மாற்றங் களைக் கொண்டு காதலை மூன்று நிலைகளாகப் பகுத்துணர முடியும். காதல் என்பதற்கு அன்பு, வேட்கை என்ற பொருள்களைத் தமிழ்பேரகராதி தருகின்றது. எல்லா உயிர்களிடத்தும் கொள்ளும் அன்பு ணர்வைக் காதல் எனக் குறியிட்டுக்காட்டினர்.

தலைவன், தலைவி உள்ளப் புணர்ச்சியை விரும்பி நிற்கும் அகமாந்தர்களின் தன்மை களைப் பாராட்டுகிறான். செல்வம் மிகவும் இன்பம் தரக்கூடியது. ஆனால், கிடைத்ததற்கு அரிது. அதைப்போலவே தலைவியும் பெறுவ தற்கு மிகவும் அரியவளாக இருக்கிறாள். பரந்தமை ஒழுக்கத்தை கடிந்து தொல் காப்பியம் கூறவில்லை, என பல இலக்கியங் களில் சுட்டுகின்றனர். பல உரையாசிரியர் கள் புலவர்கள் கூற்றினைக் கொண்டு சங்க இலக்கியப் பாடல்களில் வெளிப்படும் அறிவியல் கருத்துக்கள் வெளிப்படுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## நூற்குறிப்புகள்

1. வா.மாணிக்கம், தமிழ் காதல், ப.221, இரண்டாம் பதிப்பு - அக்டோபர் 2005, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
2. தொல்பொருள், இளம்பூரணர் உரை, ப.3- சு.வையாபுரிபிள்ளை பதிப்பு, 2005, சாந்தா பதிப்பகம், சென்னை - 14
3. தொல்பொருள், நச்சினார்க்கினியர் உரை, ப.3- அறிஞர்ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
4. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கை, ப.18- முதல் பதிப்பு 1981, நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், மதராஸ்
5. தமிழண்ணல், இலக்கியக் கொள்கை, ப.36, இரண்டாம் பதிப்பு 2011, பதிப்பாசிரியர் பேரா.சண்முகம்பிள்ளை, பாரிநிலையம்
6. தொல்பொருள், கற்பியல் இளம்பூரணர் உரை, ப.95
7. சுமதி கனகசபை, குறுந்தொகை காட்டும் வாழ்க்கை, ப.33 நவீனத் தமிழாய்வு, ராஜா பப்ளிகேஷன், 16, 17, மார்ச்சு 2021, ISSN-2321, 984 பகுதி -1, பக்கம் 111-119.
8. ஆ.இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.179 தமிழ் பாண்பாட்டு ஆய்விதழ் 2004, ISSN 1216
9. அறிவியல் பார்வை - கட்டுரை- முனைவர் து.கலாவதி, கட்டுரை, காலச்சுவடு 2010, பக்கம்.13
10. சங்க இலக்கியம் உணர்த்தும் அறிவியல் - இரா.தேவி. மலர் -2, இதழ் -1, ஜூலை 2017- ISSN-2454-3993 சான்லக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - பக்கம் 176-183